**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை 2010**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 அபிப்பிராயம்**

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பேணியுள்ளது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைப்பாட்டினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்தரைகள்**

---

**1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக நிதி ஆண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 79 நாட்கள் கால தாமதத்துடன் 2010 மே 20 ஆந் திகதி கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்படாதிருக்க வேண்டிய ரூபா 7,737,055 பெறுமதியான நீண்டகாலப் பொறுப்புக்களின் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறை ஆண்டிற்கான இளைப்பாற்று பணிக்கொடைக்கான ஏற்பாட்டின் கொள்கை மாற்றம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது ரூபா 11,656,719 பெறுமதியான காசோட்டம் சரியாக செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் பிரகாரம் அறவீடு நிச்சயமற்றதான 15 ஆண்டுகளுக்கு மேல் பழைமைவாய்ந்த ரூபா 4,907,787 தொகையான 04 பிணை முறிகள் பிற்போட்ட சொத்துக்களாக ஐந்தொகைக் குறிப்பு ஒன்றின் மூலம் காட்டப்படவேண்டிய போதிலும் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இற்கு முரணாக முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களாக ரூபா 38,097,777 தொகை செம்மையாக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 11,337,538 தொகையான இருப்புக்கள் வருடாந்த மெய்மையாய்வின் மூலம் அன்றி புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததனால் சேதமடைதல், காணாமல் போதல் போன்றவாறான நட்டங்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 605,340 பெறுமதியான எஞ்சியுள்ள 1121 பால் வெட்டும் கத்திகளின் இருப்பு இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்படுத்தப்படாதிருந்தமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபமும் இறுதி இருப்பும் ரூபா 605,340 தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கணிப்பீட்டு தவறு காரணமாக 2010 ஆம் ஆண்டிற்கான இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 3,491,168 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 317 கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ருபா 6,468,898 பெறுமதியான மீதிகளும் ரூபா 2,348,490 பெறுமதியான அறவிடப்பட வேண்டிய 18 மீதிகளும் 5 ஆண்டுகளுக்கு மேல் பழைமைவாய்ந்ததாக இருந்ததுடன் அவை அறவிடப்படுகின்றமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வளவில் கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 5,214,500 தொகையான முற்பணங்கள் நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய மீதியாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 116 கடன்கொடுத்தோர்களுக்குச் செலுத்தவேண்டிய ரூபா 4,150,725 தொகையான மீதியும் ரூபா 1,586,666 தொகையான செலுத்தவேண்டிய 14 மீதிகளும் 05 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கு எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

ரூபா 288,865,434 பெறுமதியான நிலையான சொத்துக்கள், ரூபா 23,112,737 தொகையான நடைமுறைச் சொத்துக்கள், ரூபா 4,150,725 தொகையான நடைமுறைப் பொறுப்புக்கள் என்பவற்றிற்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு, விபரமான பட்டோலைகள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் முதலியன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் (நி.பி) | |
| (i) நி.பி 104(3), (4) மற்றும் 110 | 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ரூபா 335,817 தொகையான 05 வாகன விபத்துக்களுக்காக தொடக்க அறிக்கையும் முழுமையான அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் விபத்துக்கள் தொடர்பாக இழப்புக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 756 | 2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம்

(i) 4.2.5 ஆம் பந்தி — செயற்திறனான மூலதன முகாமைத்துவத்திற்கு உதவியளிக்கும் வகையில் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மற்றும் இருப்புக்களுக்குரிய காலப்பகுப்பாய்வு அறிக்கையும் இனங்காணப்பட்ட மெதுவாக அசையும் மற்றும் காலங்கடந்த இருப்புக்கள் தொடர்பான விபரமும் மாதாந்தம் முகாமைத்துவச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 6.5.1 ஆம் பந்தி — நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாடுகளின் பெறுபேறுகள் மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 231,582,450 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான ரூபா 216,352,688 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 15,229,762 தொகையால் அதிகரித்திருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 181,050,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொண்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 50,532,450 வரை குறைவடைந்திருந்தது. இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 176,300,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 40,050,679 வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையின் அதிகரிப்பு ரூபா 10,481,771 ஆக இருந்தது. எவ்வாறாயினும், சபையின் டேடன்ட்பீல்ட் மற்றும் குருவிட்ட தோட்டம் என்பன முன்னைய ஆண்டினைப் போல மீளாய்வாண்டிலும் இலாபம் உழைத்திருந்ததுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபம் முறையே ரூபா 50,497,431 மற்றும் ரூபா 24,364,387 ஆக இருந்தது. குமாரவத்த மற்றும் நாரம்பொல தோட்டங்களில் முன்னைய ஆண்டினைப் போல மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா 2,916,518 மற்றும் ரூபா 1,228,287 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

இதற்கிணங்க அந்த நான்கு தோட்டங்களில் ஒட்டுமொத்த இலாபமாகிய ரூபா 70,717,013 தொகையினை செம்மையாக்கியதன் பின்னர் ஆண்டிற்கான ஒட்டுமொத்த செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,184,562 மிகையாக இருந்ததுடன் அதோடொத்த முன்னைய ஆண்டிற்கான அந்த நான்கு தோட்டங்களின் ஒட்டுமொத்த இலாபமான ரூபா 17,130,601 தொகையினை செம்மையாக்கியதன் பின்னர் முன்னைய ஆண்டிற்கான ஒட்டுமொத்த நட்டம் ரூபா 22,920,078 வரை குறைவடைந்திருந்தது.

### 2.1.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கள்

1967 மார்ச் 17 ஆந் திகதிய 218 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் உத்தியோகபூர்வ வதிவிடங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் எல்.பீ எரிவாய்வு வழங்க முடியும் என்ற போதிலும் அதற்கு முரணாக உத்தியோகபூர்வ வதிவிடங்களில் குடியிருக்காத 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 40,612 பெறுமதியான எல்பீ எரிவாய்வு வழங்கப்பட்டிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 2.2.1 செயலாற்றல்

------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயிர் பல்வபைப்படுத்தலின் கீழ் குருவிட்ட, டேடர்டன்ட்பீல்ட், நாரம்பொல, குமாரவத்த ஆகிய தோட்டங்களுக்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 2,642,905 தொகையான பயிர் விற்பனை வருமானம் கிடைத்திருந்ததுடன் அதற்காக ரூபா 1,767,325 தொகையான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## (ஆ) இறப்பர் பால் உற்பத்தியின் செயலாற்றல்

குருவிட்ட தோட்டம் மற்றும் டேர்டன்ட்பீல்ட் தோட்டத்தின் இறப்பர் பால் உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2009 | | | 2010 | | | வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பால் வெட்டப்படுகின்ற தோட்டங்கள் | இறப்பர் பயிர்ச் செய்கைக் காணியின் இடப்பரப்பு | ஒரு ஹெக்டயருக்கான உற்பத்தி | ஆண்டிற்கான மொத்த உற்பத்தி அளவு | உற்பத்தியின் பெறுமதி | ஒரு ஹெக்டயருக்கான உற்பத்தி | ஆண்டிற்கான மொத்த உற்பத்தி அளவு | உற்பத்தியின் பெறுமதி | அளவு | பெறுமதி (குறைவடைதல்) |
| | | கி.கிராம் | கி.கிராம் | ரூபா | கி.கிராம் | கி.கிராம் | ரூபா | கி.கிராம் | ரூபா |
| டேடன்ட்பீல்ட் | 193.04 (ஹெக்டயர்) | 977 | 188,569 | 29,407,503 | 968 | 186,796 | 79,924,404 | (1,773) | 50,516,901 |
| குருவிட்ட தோட்டம் | 68.79 (ஹெக்டயர்) | 1214.58 | 83,551 | 10,686,173 | 1,480 | 101,836 | 37,280,123 | 18,285 | 26,593,950 |

மேற்கூறிய தகவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குருவிட தோட்டத்துடன் ஒப்பிடுகையில் டேடர்ன்ட்பீல்ட் தோட்டத்தில் ஒரு ஏக்கருக்கான இறப்பர் பால் உற்பத்தி 2009 ஆம் ஆண்டில் 237 கிலோ கிராமினாலும் 2010 ஆம் ஆண்டில் 512 கிலோ கிராமினாலும் வீழ்ச்சியுற்றிருந்தது. குருவிட்ட தோட்டத்தின் பயிர்கள் ஆராய்ச்சி பயிர்களாக இருத்தல். மழைக் காப்பினைப் பயன்படுத்தல், காலநிலைத் தன்மைகள், நில அமைவிடம், குருவிட்ட காணியின் பரப்பளவு குறைவாக உள்ளதனால் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இலகுவாக இருத்தல், பயிர்களின் வயது ஆகிய காரணங்களினால் குருவிட்ட தோட்டத்தில் ஒரு ஹெக்டயருக்கான இறப்பர் பால் உற்பத்தியினை டேடன்ட்பீல்ட் தோட்டத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது.

(ii) டேட்னட்பீல்ட் தோட்டத்தில் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான இறப்பர் பால் உற்பத்தி ஒரு ஹெக்டயருக்கு 9 கிலோ கிராமினால் குறைவடைந்திருந்தது.

(iii) குருவிட்ட தோட்டத்தில் 2007 ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டயருக்கான இறப்பர் பால் உற்பத்தி 1615 கிலோ கிராமாகவும் 2008 ஆம் ஆண்டளவில் அது 1422 கிலோ கிராமாகவும் இருந்த அதேவேளை 2009 ஆம் ஆண்டளவில் அது 1214 கிலோ கிராம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. 2010 ஆம் ஆண்டின் போது மீண்டும் 266 கிலோ கிராமினால் அதிகரித்திருந்தது.

(iv) 2010 ஆம் ஆண்டின் போது கிறேப் மற்றும் சீட் இறப்பரின் 1 கிலோ கிராமிற்கான சராசரி விற்பனை விலை 87% ஆல் அதிகரித்தல் மற்றும் பதப்படுத்தப்படாத இறப்பர் 1 கிலோ கிராம் 88% ஆல் அதிகரித்தல் காரணமாக 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டின் போது டேடன்ட்பீல்ட் தோட்டத்தினதும் குருவிட்ட தோட்டத்தினதும் இறப்பர் பால் உற்பத்தியின் பெறுமதி முறையே ரூபா 50,516,902 இனாலும் ரூபா 26,593,950 இனாலும் அதிகரித்திருந்தது.

(இ) 10 ஆண்டுகளுக்கு முன்னர் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட பின்வரும் 97 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்திசெய்தல் செயல்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| **பிரிவு** | **மொத்த செயற்திட்ட பிரிவுகளின் எண்ணிக்கை** | **செயல் முன்னேற்றம்** | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **5%** | **10%** | **15%** | **20%** | **25%** | **30%** | **35%** | **40%** | **45%** | **50%** | **50% இற்கு மேல்** |
| (1) மரபு விஞ்ஞானமும் பயிர் வளர்ப்பும் | 06 | | | | | | 01 | 03 | 02 | | | |
| (2) பயிர் விஞ்ஞானம் | 32 | | | | | | | 01 | 01 | 02 | 08 | 20 |
| (3) மண் மற்றும் தாவர ஊட்டச்சத்து | 35 | 02 | 01 | | | | | | | | | 32 |
| (4) பயிர் நோய் விஞ்ஞானம் | 08 | | | | | | | | | | | 08 |
| (5) உயிரியல் இரசாயனம் | 08 | | | | | 01 | | | 02 | | 02 | 03 |
| (6) உயிரியல் பிரிவு | 05 | | | | | முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டன | | | | | | 08 |
| (7) பயன்பாட்டு ஆராய்ச்சி பிரிவு | 03 | | | | | | | | | | | 03 |
| | ------------ | | | | | | | | | | | |
| | 97 | | | | | | | | | | | |
| | ====== | | | | | | | | | | | |

மேற்கூறிய செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மண் மற்றும் தாவர ஊட்டச்சத்தும் பிரிவினால் தற்போது 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 25 ஆம் மற்றும் 34 ஆம் இலக்க செயற்திட்டங்களின் 2010 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறைவேற்றுதல் செயல்முன்னேற்றம் 5% அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் போதியளவு எண்ணிக்கையான ஊழியர்கள் இல்லாமை செயல்முன்னேற்றம் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது. இப்பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட 16 ஆம் இலக்க செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறைவேற்றுதல் செயல்முன்னேற்றம் 10% அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் பரிசோதனைக்குத் தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமை இதற்கு காரணமாக இருந்தது.

(ii) தாவர நோய் விஞ்ஞானப் பிரிவினால் தற்பொழுது 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 06 ஆம் இலக்க செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறைவேற்றுதல் செயல்முன்னேற்றம் 25% அளவில் காணப்பட்டதுடன் போதியளவான ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் உபகரணங்களும் இல்லாமை செயல்முன்னேற்றம் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் கொள்வனவுகளும் களஞ்சிய பொறுப்புக்களும் ஒரே உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக களஞ்சியக் கட்டுப்பாடு தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) காணியின் உரிமை மாற்றம் செய்யப்படாது அளவ்வ நாரம்பொல தோட்டம் மற்றும் மொனராகலை குமாரவத்த தோட்டத்தின் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 14,751,127 தொகையும் நில அளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 90,000 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) எழுத்து மூல உடன்படிக்கை ஒன்று இல்லாமல் நாரம்பொல தோட்டமும் மொனறாகலை குமாரவத்த தோட்டமும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரிமையாகும் வகையில் வருடாந்த குத்தகைக்காக முறையே ரூபா 640,000 மற்றும் ரூபா 400,000 படி 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ரூபா 5.2 மில்லியன் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபையின் பதவியணியினருக்காக 87 உத்தியோகபூர்வ வீடுகள் காணப்பட்டிருந்தும் அதில் 17 வீடுகளில் உத்தியோகத்தர்கள் குடியிருக்கவில்லை.

### 2.2.4 கூட்டிணைந்த திட்டம்

2010 - 2014 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அடுத்துவரும் ஆண்டுகளுக்குரிய எதிர்வு கூறல்களுடன் ஒப்பிடக்கூடிய வகையில் முன்னைய ஆண்டுகளுக்கான நிதித்தகவல்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் ஐந்து ஆண்டு காலத்திற்குள் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகளுக்குரிய நிதிப் பெறுமதிகள் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபை தயாரித்திருந்த பாதீட்டிலுள்ள மதிப்பிடப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 09% இலிருந்து 78% வரையான குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீடு

(இ) சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) இருப்பு

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஊ) ஆராய்ச்சி நடவடிக்கை

(எ) கொள்வனவுகள்